SUPPLEMENT TO THE BRAHMAVIDAY

# ப்ரம்மவித்தியா பத்திரிகையின்

## அநுபந்தம்

புத் ௰௧] சிதம்பரம் ஏவிளம்பி௵ மாசிமீ ௨௰௨க்கு 1898௵ மார்சுமீ ௪௨ [இல ௰அ.

### வைதிகசந்திரமௌலி

### மகாபாசுபதாஸ்திரபராவர்த்தனப்பிரயோகம்.

முன்தொடர்ச்சி.

---

‘புதியசைவம் பேசித்தாந்திரிக ஸ்தாபகராவார்’ என்றஇரண்டுமூன்று சுலோகங்கள் எழுத சாவகாசமும் எழுத்துக்களும் சொற்களும் பொருள்களும் எழுதுங்கருவிகளும் தீர்கதர்சனமும் அற்றுப்போன குற்றமன்றோ இவருக் கற்புத அத்துவிதத்துவேஷத்தை உண்டாக்கி அவ்விவாதவாத சூரராகிய ஜகத்குருவை ஞதியோரைக் குருடர் என்றும் மற்றும் பலவிதமும் தூஷித்துவரச்செய்தது. பாவம் என்ன செய்வார்! உலகெலாம் தம்மதத்துக்கு நேர்விரோதியான ஸ்ரீ ஜகத்குருநாதனைப் புகழ்ந்திட்டால் அவர் அவரைத் தம் கோஷ்டிமட்டி விகழ்ந்து மகிழ்ந்திட இத்தமிழ்பரவையினேகதேசமின்றி வேறு தேசமில்லை. அதுகண்டே அதனிடம் நுழைந்து பதுங்கி ஏதோ சின்னாட்களில் தோன்றிவருகிறார். ஸ்ரீ ராமன் உலகெலாம் புகழப்பெற்றிருப்பினும் அவனது மாயையுருவத்தின் றலையைச் செதித்துக் காட்டியாவது சீதாப்பிராட்டியாரிடம் அளவிற் றம்பெருமையை விரித்து மகிழ்ந்த இந்திரஜித்தன் வாஸஞ்செய்த புண்யபூமியில் பிறந்த கண்ணுடையவள்ளலாகிய இவருக்கு இவ்வளவாயினும் மாயை தெரியவேண்டாமோ? வேண்டுவதே நியாயம் நியாயம். இவ்விதம் முழுக்குளறுபடையாகவும் விஷயம் ஏதுமின்றியும் வீண்திட்டுகளாக 23ம் விஜயத்துவஜத்தின் $\frac{1}{12}$ பாகத்தைப் பாழாக்கி அதுடன் விடாது அடுத்த பத்திரிகையிலும் தோன்றினார். இவர் தாந்திரிகநாடகத்தின் அந்தவங்கணத்தையும் பரிசீலிப்போம். அவர் அப்பத்திரிகையில் ஆரம்பமுதல் இறுதிவரையில் ஸ்ரீஜகத்குருநாதனைத் திட்டியிருக்கின்றார். அது ஆக்கிரகத்தால் அவர் திட்டினாரென்பதை இங்கு எடுத்துக்காட்டுவோம். கடவல்லியில்:—

ஸோத்வந: பாரமாப்நோதி தத்விஷ்ணோ: பரமம்பதம்॥

‘அவர் அத்துவாவின் மேலானதைப் பெறுவான்; அதுவே விஷ்ணுவின் பரமபதம்’ என்றுள்ள வசனத்தின் உரையில் ‘அத்வா’வென்ற சொல்லுக்குச் சிவாகம சாக்தாகமங்களிற் சொல்லப்பட்டும் தாந்திரிகார்த்தானுவாத பரபுராணங்களிற் சொல்லப்பட்டுமுள்ள ஷடத்வாக்களைப் பொருளெனக் கூறாது ‘ஸம்ஸாரகதி’ என்று பொருள்கூறியது ஜகத்குருஸ்வாமிகளுக்கோர் பெருங்குற்றமாமென்கிறார். இவர் ஒரு சொல்லுக்கு ஒருபொருள் சங்கேதமாக ஒரு நூலில் சொல்லப்பட்டால் அதையே எங்கும் அச்சொற்குப் பொருளாக்கவேண்டுமென்று மயங்குகிறார். ஸ்ரீலோககுருஸ்வாமிகளோ உலகவழக்கு (அதர்வகோசாதிகள்) வேதவழக்கு இரண்டிற்கும் முரணுமாறின்றி இவர்கூறும் பொருளையும் இதன்மேலும் அனேகப் பொருள்களையும் அடக்கிய வியாபகப்பொருளையுரைத்தனர். இவ்விஷயத்தில் ஜாபாலத்துள்ள பஞ்சநாம நிர்வசனானுசாரியாய் ‘பூதி’ என்ற சொல்லுக்குப் பொருளுரைத்த நேர்மையறியாது “இறகு சென்றவழியெல்லாம் எட்டிங் கழரியதுபோல”இங்குமிவர்கழருவாராயினர். ஒவ்வொரு உபநிடதங்களிலும் உத்தமமான பிரமப்ராப்தி சொல்லுமிடம் அனேக கதிகளைச் சொல்லி அவைகள் கடந்து உண்மையைப்பெறுவானென்பது வழக்கம். அம்முறைப்படியே இவ்வுபநிடதமும் கூறியபடியால் ஸ்ரீஜகத்குருஸ்வாமிகள் அவ்விதமே அச்சொற்குப் பொருள்செய்தனர். அத்வா, அயனம், வர்த்ம, மார்க்கம், ஸ்ருதி முதலிய சொற்கள் ஒருபொருள் கொண்டு முடிவுபெறுவன. உபநிடதங்களில் மேற்கண்ட சொற்கள் அனேகவிடங்களில் உபயோகப்படுத்தப் படுவதாலும் பிருகஜ்ஜாபால வுபநிடதம் ‘பூதி’ என்ற சொல்லுக்கு அவைதிக தீக்ஷையைப் பொருளாக்காது ஐசுவரிய காரணமாதலாற் பூதியென்று ஸ்ரீஜகத்குருநாதனுக்கு அனுகூலமாகவிவரணஞ் செய்தாற்போல் இந்தவுபநிடதத்துக்கண்ட ‘அத்வா’ ‘ஸம்ஸார துக்கமே’யென்றும், அதன்மேல்உள்ள விஷ்ணுபதம் சிவஸ்தானமேயென்றும் நன்கு நிரூபித்தமையாலும், அச்சொற்கு அப்பொருளே பொருத்தமுடையதாமென்க. வேதங்களுக்குப் பொருளுரைப்பது சர்வவேதாந்தப் பிரத்யய நியாயத்தால் எல்லா வுபநிடதங்களும் முரணாவழியேயன்றோ பொருட்படுத்துவது நியாயம். அற்றேல் ஸ்ரீகண்டமுனிவர்கொண்ட பொருள் அவலமோவெனின், அற்றன்று; இவர் கூறும் ஆறு அத்வாக்களும் ஸம்ஸார கதியிலடங்கியதே யாதலால் அவர்கொண்டது வியாப்யப்பொருளும், லோககுருஸ்வாமிகள் கொண்டது வியாபகப்பொருளு

மாம். ஆனால் இதே உபநிடதத்தின் உபக்கிரமோபசங்காரங்களையும் மற்றவுபநிடத வியவகாரங்களையும் நோக்கிட்டால் இவர் சொல்லும் பொருள் பொருந்தாதென்பது தெற்றெனப்புலப்படும். எதனாலெனில், 'அத்வா' என்ற சொல்லுக்கும் எங்குமுள்ள முக்கியப்பொருள் மார்க்கம். சிவபுராணாகமங்களிற் சொல்லிய கௌணப்பொருள் மந்திராத்வா முதலியன. இவற்றுள் வியாபகப்பொருள் பொருந்தாதவிடம் கௌணப்பொருள் உரைக்கவேண்டும். இங்கு கௌணப் பொருளே பொருந்தாது. அது பொருந்தாதென்பதை விரித் தடியிற் காட்டுவோம். இவர் சொல்லியபடி இந்த ஒரு அத்வாவுக்குப்பொருளுரைத்திட்டால் சாந்தோக்கியம் முதலிய வுபநிடதங்களில் உள்ள அத்துவாவின் கதி அத்வானமேயாகும். சாந்தோக்கியத்தில் ௫-ம் அத்தியாயம் ௰-ம் கண்டம் ௫-ம் மந்திரத்தில்,—

"அதைதமேவாத்வாநம் புநர்நிவர்தந்தே"।

'மீண்டும் இதே அத்வாவில் திரும்புவார்கள்' என்று ஸ்பஷ்டமாய் தூமாதி மார்க்கத்தை (ஸம்ஸாராதி கதியை) அத்வாவெனக் குறிக்கப்பட்டிருக்கிறது. மேலும் அதே கண்டம் ௮-ம் மந்திரத்திலும் 'அதைதயோ꞉ பதோ꞉' இவ்விரண்டு வழிகளிலுமென்று ஸ்பஷ்டமாய் 'அத்வபதார்த்தம் சம்சார கதியே' என்று நிரூபிக்கப்பட்டது. நிற்க, இவர் திருபுராதபணத்தில் 'ஏதே அத்வா' இவர் கூறும் ஆறு அத்வாக்களேயெனக் குறித்ததாகச் சொன்னார். அது முழுத்தவறு. அந்த வுபநிடதத்தில்,—

'தத்ஸவிதுரிதிவமெவேண்யாய்வநா'

'காயத்திரியால்—மூர்த்தியமார்க்கத்தால்' என்றுள்ளதேயன்றி வேறில்லை. அங்கு முதலில் எழுதும் வழி குறிக்கப்பட்டமையின் அதையே தழுவியது 'மூர்த்தியவழி' என்ற சொல்லென்க. இந்த வுபநிடதமும் முன்பின் ஆலோசிக்கப்படுமோயின் இதே பொருள் உண்மையென்பது விளங்கும். இவ்வுபநிடதம் ஆதியில்—

[௧] 'அநந்யப்ரோக்தே கதிரத்ர நாஸ்தி'

'மற்றவனாற் குறிக்கப்படாத விவ்வான்ம தத்துவத்தில் 'கதி' (ஸம்ஸாரகதி) இல்லையென்றும்,—

[௨] ஸ்தோமம் மஹதுருகாயம் ப்ரதிஷ்டாம்।

பெரிய தோத்திரத்தையும் உருகாய (ஸ்ம்ஸாரகதி)த்துள்ளப் பிரதிஷ்டையும் (நீ ஓ நசிகேதாவிட்டனை) என்றும்,

[௩] மத்வா தீரோ ஹர்ஷஶோகௌ ஜஹாதி।

'தியானித்துத் தீரன் இன்பதுன்பங்களை (ஸம்ஸாரகதியை) விடுவானென்றும்,—

[௪] அந்யத்ர தர்மாதந்யத்ராதர்மாதந்யத்ராஸ்மாத்க்ருதாக்ருதாத் । அந்யத்ர பூதாச்ச பவ்யாச்ச யத்தத்பஶ்யஸி தத்வத ॥

தருமத்தினும் வேறு அதருமத்தினும் வேறு காரியத்தினும் வேறு காரணத்தினும் வேறு பூதத்தினும் வேறு பவிஷ்யத்தினும் வேறு (ஸம்ஸார கதிக்கப்பாலுள்ள) எதைப் பார்ப்பானோ அதையுபதேசித்தருளவென்றும்,—

[௫] அபயம் திதீர்ஷதாம்।

'பயமின்றித் தாண்ட விரும்புபவர்களுக்கு' என்றும், முன்னர் ஸம்ஸார கதியையொழிக்கவேண்டியே வினாவும் விடையும் நிகழ்ந்தன. மேலும்,—

[௬] ம்ருத்யோ꞉ ஸ ம்ருத்யுமாப்நோதி।

'ஜன்மத்தைவிட்டு ஜன்மத்தையடைவார்' என்றும்,

[௭] ம்ருத்யோ꞉ ஸ ம்ருத்யும் கச்சதி।

'ஜன்மத்தைவிட்டு ஜன்மத்தைப் பெறுவான்' என்பதாதியால் உபநிடதத்திலுள்ள வித்தையை உண்மையில் அறியாதான் அடைவது ஸம்ஸார கதியென்றமையாலும் இது பொருட் பொருத்தமுடையதாம். மேலும் இதே அனுவாகமுள்ள மந்திரம் எந்த இருமந்திரங்களின் சங்கிரகமோ அவ்விருமந்திரங்களில் ஸ்பஷ்டமாய் இங்குள்ள அத்வச்சொல் சம்ஸ்காரத்தைச் சொல்லுவதென்றே ஏற்படுகிறது. அம்மந்திரங்கள் வருமாறு:—

[௮] 'யஸ்த்வவிஜ்ஞானவான்பவத்யமனஸ்க꞉ ஸதாஶுசி꞉।
ந ஸ தத்பதமாப்நோதி ஸம்ஸாரம் சாதிகச்சதி' என்றும்,

[௯] யஸ்து விஜ்ஞானவான்பவதி ஸமனஸ்க꞉ ஸதாஶுசி꞉।
ஸ து தத்பதமாப்நோதி யஸ்மாத்பூயோ ந ஜாயதே॥

என்றும், [௮] எவன் விஞ்ஞானமில்லாதவன் நல்ல மனமில்லாதவன் என்றும் அசுசி அவன் அப்பதத்தையே அடையான் ஸம்ஸாரத்தையே அடைவான்.

[௯] 'எவன் அறிவுள்ளவன் நல்ல மனதுள்ளவன் என்றும் சுசி அவனே அப்பதம் பெறுவான். 'மீண்டும் பிறப்படையான்' என்பது அம்மந்திரங்களின் பொருள். இங்ஙனம் முன்னிருமந்திரங்களில் ஸம்ஸாரியடையக்கூடாததும் துறவியே பெறக்கூடியதும், பதமெனக் குறிக்கப்பட்டதும் யாதென வாசங்கை நிகழ, அம்மந்திரம் வருமாறு:—

[௰] விஜ்ஞானஸாரதிர்யஸ்து மந꞉ப்ரக்ரஹவாந்நர꞉।
ஸோऽத்வந꞉ பாரமாப்நோதி தத்விஷ்ணோ꞉ பரமம் பதம்॥

[ம] விஞ்ஞானத்தை (நல்லறிவை) சாரதியாய்ப்பெற்று நல்ல மனதைக் கடிவாளமாய்க்கொண்ட மனிதன் அத்துவாவின் (ஸம்ஸாரகதியின்) அப்புறத்துள்ளதைப் பெறுவான். அதுவே விஷ்ணுவின் பரமபதமாமென்றது. இங்கு ஆகமங்களிலும் புராணங்களிலும் சொல்லப்படும் அத்வாவுக்குச் சிறிதும் சம்பந்தமில்லையென்பதும், விஞ்ஞானத்தால் தாண்டக்கூடியதாக முன்குறித்த ஸம்ஸாரமே பிரகிருதமாகையால் அத்வபதப்பொருள் பொருந்துமென்பதும் முன்பின் மந்திரங்களைக் கண்டோர்க்கு வெள்ளிடைமலைபோற் கிடைக்கும். நிற்க; பிருகஜ்ஜாபால வுபநிடதம் இறுதியிலும் இதே பொருளடங்கிய மந்திரங்களடியில் வருமாறுள்ளன.

யத்ர நதீ: வா நிவ்ருத்திம் ஸதாநந்தம் பராநந்தம் ஸாந்தம் ஸாஸ்வதம் | ஸதாஸிவம் ப்ரஹ்மாதிவந்திதம் யோகித்யேயம் பரம் பதம் | யத்ர கத்வா நிவர்த்தந்தே யோகிந: தததத் விஷ்ணோ: பரமம் பதம் ஸதா பஸ்யந்தி ஸூரய:||

'எங்கு நதிகள் செல்லா? அது ஸதாநந்தம், பரமானந்தம் சாந்தியுள்ளது சாசுவதம் சதாசிவம் பிரமாதிவந்திதம் யோகிகளால் தியானிக்கத்தக்கது பரமபதம். எதை அடைந்து யோகிகள் மீளார் அதை ரிக்கும் கூறியது. அது விஷ்ணுவின் பரமபதம். அதைச் சூரிகளென்றும் காண்பா'ரென்பன. இவ்வித வசனம் நரசிம்மதாபினி முதலிய அனேக உபநிடதங்களிலும் உள்ளனவாகுலும் இவருக்கிவ்வளவு காட்டினுற் போதுமல்லவா. ஆகவே யாதும் சம்பந்தமில்லாது இந்த வியாபகப் பொருளுரைத்த ஆசிரியரைத் தூஷித்தது மகத்தான துவேஷத்தாலன்றி வேறில்லை. பிருகதாரண்யம் அதர்வசிரசுகளில்,—

ஏஷ பந்தா விததோ உத்தரேண|

'இதோ இவ்வழி வடபுறத்து விரிந்த'தென்றிருப்பதால் அவற்றிற்கும் இவர் அத்வப்பொருள் கூறிவாரோ? சிலவிடங்களில் அயனமென்றும், சிலவிடங்களில் ஸிருதியென்றும், சிலவிடத்து மார்க்கமென்றும், மற்றும் பல சொற்களால் ஸம்ஸாரகதியைக் குறிப்பது உபநிடதங்களின் இயலாதலின், அவ்வியலறிந்து செய்த வ்யாக்கியானம் இவருக்குக் கைத்தது 'ஓட்டகத்துக்குமாந்தளிர்போலா'மென்க. இதற்குச் சமானார்த்தமான அனேக உபநிடத வசனங்களை விரிவஞ்சிவிடுத்தோம். ஸ்ரீமத் தீக்ஷிதமூர்த்திகளும் ஸ்ரீஹரதத்தசுவாமிகளும் ஸ்ரீ ஸ்ரீகண்டயோகிகள் கொண்டவற்றிற்கும் யாம் முன்னரே நன்கு பொருத்தங் கூறினோமாதலால் மீண்டும் அதை யிங்கெழுதோம். நிற்க, இம்மட்டோடுவிடாது ஸ்ரீஜகத்குருஸ்வாமிகள் இவர்கொண்டபடி பொருத்தமில்லாப் பொருளுரைத்து ஆகமத்தைச் சிறிது தழுவாதுவிட்டமையால் அம் மகாபுருஷனது திவ்யாவதாரத்தைக்குறிக்கும் ஸ்ரீசிவாகசிய வசனங்களையும் ஒருக்கால் பிரக்ஷிப்தங்களோவெனவும், இவ்விதம் விபரீதஞ்செய்தவரைச் சிவரகசியம் தோத்திரஞ் செய்யுமாவெனவும் கூறித் தம்முள்ளே தாம் மகிழ்வுற்றார். இம்மகானுபாவருக்குப் பிரட்சிப்தமென்ற சொல்லை தெரியாது. இங்கிலீஷில் பிறந்து வளர்ந்ததுபோல் அதையே தாய் பாஷையாய்க்கொண்டவர்போல் அதற்கு இன்டர்பொலேஷன் (Interpolation) என்று பெயரிட்டுக் காட்டுகிறார். நியாயந்தானே! ஸ்ரீலோகாசாரியசுவாமிகளும் தவறிய விஷயத்தைக் கண்டுபிடித்து உலகத்தாருக்குண்மையான உபநிடதார்த்தத்தை யுதவும் கலிகால மகாசாரியஸ்வாமிகளுக்கு ஸம்ஸ்கிருத பாஷையைக் காட்டிலும் இங்கிலீஷே அன்றோ ஸ்வயபாஷையாகவேண்டும். நியாயமே. ஐயரோ, ஆங்கிலேயமுங் கற்றார். ஆகவே அவர்சொல்லும்வேதாகமார்த்தம் பிழைபடுமோ. ஆதிகாலத்து ஆசிரியரெவருக்கும் அப்பாஷையிற் பயிற்சியில்லாமையால், அங்குகூட பேதைகள் இஞ்ஞான்றனேகருளர். அவர் பிரபஞ்சத்தே இவ் வையர் சித்துவிளையாடுவேதுபோலும்! மேலும் பசு பாசம் பதி' என்ற சொற்களுக்குச் சங்கேதமாய் அநேக புராணாகமங்களில் ஜீவர், மலம், ஈசுவரனென்ற பொருள் சொல்லப்பட்டமையால் அவைகட்கு விரோதமாய் வேதபாஷ்யங்களிலும் மற்றவிடங்களிலும் எவரேனும் பிரகரணத்துக்கேற்றவாறு பொருளுரைத்தால் அவரை இவர் திட்டாது விடார்போலும். பாருங்கள்!

[க] அக்நீஷோமீயம் பஸுமாலபேத|

'அக்னி ஸோமர் இந்த தேவதைகளை உத்தேசித்துப்பசுவை வேட்க' என்றும்,—

[உ] ஸப்ததஸ ப்ராஜாபத்யாந் பஸூநாலபேத||

'பிரஜாபதிதேவதைக்குப் பதினேழு பசுக்களை வேட்கவேண்டு'மென்றும், பசு சப்தம் கன்மகாண்டங்களில் பலவிடங்களில் வருவதால் அங்கெல்லாம் ஜீவரென்று பொருள் கொள்ளவேண்டுமேயன்றி நாற்கால் மிருகமென்றது தவறென்றும் இவர் சொல்லத் தடையில்லை. ஒரு சமயம் ஞானகாண்டத்திற்றான் பசுபதம் ஜீவனைக் குறிக்குமென்றால் அதுவும் பொருந்தாது. கடவல்லியில்—

பஹூந் பஸூந் ஹஸ்திஹிரண்யமஸ்வாந்||

'அனேக பசுக்களையும் ஆனைகளையும் பொன்னையும் குதிரைகளையும்'என்றும்,தைத்தரீயத்தில் அநேகவிடங்களில்:

மஹாந் பவதி ப்ரஜயா பஸுபி:||

'பெரியவனுவான் பிரஜைகளாலும் பசுக்களாலும்' என்றும், சாந்தோக்கியத்தில்:—

'மஹாந் ப்ரஜயா பஸுபி:'

என்று. இதுபோலவே பலவிடங்களில் வருகிறபடியா லும் உபநிஷத்துக்களில் பசுபதம் ஜீவபரமேயென்று இவர் சொல்வாரேல் அஃது எவ்வளவு மணக்கும்? மேலும் இவ் வுதாரணங்களில் பொருத்தமில்பொருள் கூறுது ஆன்ரோர் பொருந்தப் பொருளுரைத்தாரெனின், முன்னரே யாம்கூறி யவாறு ஸ்ரீ லோககுருஸ்வாமிகளும் முன்பின் பொருந்தப் பொருளுரைத்தது எங்ஙனம் இவருக்குக் குற்றமாயது? நிற்க; தைத்தரீயத்தில், 'பஶூ ஜிவஶூஷ' என்ற ஒருவிடத்துக்காவது பசுக்கள் ஆன்மாக்களென்று பொருள்செய்யாது விட்டது குற்றமேயென, இனி இவர் சொல்லி ஆசிரியரைத் திட்டுவார். என்செய்வார் பாவம்! இவர்கொண்ட வைதிக மெய்கண்டாகம சித்தாந்த பரமாசாரியரெவரும் வேதாந்தங்களுக்கு வியாக்கியானஞ் செய்திலர். இவரும் இவ் வாரிய தேசம் வருவதற்குமுன் இதனியலறியார். இன்று இங்கு பார்த்தால் வேதவேதாந்த பாஷ்யக்காரரெவரும் அத்துவிதிகளாகவே இருக்க, அதைக் கண்டு அவர் படுந்துயரத்தை இவ் வசைச்சொற்களால் வெளிக்காட்டுகிருர். பசுச் சொல்லின் கதி இவ்விதமாயிற்றே. பாசமோ! அதுவும் அதற்குமேற்ருன். அனேக விடங்களில்,—

ஜ்ஞாத்வா தேவம் ஸர்வ பாஶாபஹா:|

'தேவனையறிந்து எல்லாப் பாசங்களாலும் விடுவான்' என்பதாதிவிடங்களில் பாசமென்ற சொல்லுக்கு மும்மலமென்ற பொருள் கூடுமோயினும் அதையுபேக்ஷித்து,—

க்ஷீயந்தே சாஸ்ய கர்மாணி தஸ்மிந் த்ருஷ்டே பராவரே||

'அப்பராபரனைக் கண்டால் கன்மங்கள் ஒழிந்திடும்' என்றும்,

ஜ்ஞாத்வா தேவம் ஜந்ம ம்ருத்யு ப்ரஹாணி:||

'தேவனையறிந்திடில் பிறப்பிறப்பு நீங்கும்' என்றும்எழுந்தவுபநிடதவசனங்களைத் தழுவி ஜனனமரணவேதுவான மாயையென்றும், அவித்தையென்றும் பொருள் செய்வதேபெரியோர் வழக்கமாயிருக்கிறது. இதுமட்டோ! உபநிடதங்கள் மாயை, பாசம், அவித்தை, பிராந்தி, கன்மம், பந்தம், பிரகிருதி என்பதாதி பரியாயங்களால் வழங்குகின்றனவேயன்றி மலத்தைத் தொடுவதேயில்லை. இங்ஙனம் நிர்மலமான வேதாந்தத்தில் மலசம்மந்தப்படுத்திப் பொருளுரைக்காதொரு பெருங்குற்றமாம்போலும். அந்தோ! இஃதல்லவோ வேதாந்தநிரூபண பாண்டித்யம்! நிற்க. 'ஆன்மா'வென்ற சொல்லை ஆகமங்கள் ஜீவனிடத்தே விநியோகிக்கின்றன. 'புருஷன்' என்ற சொல்லையும் அப்படியே. வேதபுராணேதிஹாஸங்களோ, அனேகமாய் ஜீவனிடத்தும் ஈசுவரனிடத்தும் சுத்த சைதன்னியத்திடத்தும் உபயோகிக்கின்றன. எங்கும் ஆன்மாவென்றதற்கு ஆகமபுராணங்கள் ஒன்றுபட்ட ஒரேவழி ஜீவனென்றே பொருள் கூறிடில் அந்தோ, எல்லா வேதாந்தங்களும் வ்யர்த்தமாய் உண்மையில் 'வேதாந்தங்களிலான்மா'வென்னுஞ் சொல் சுத்த சைதன்னியத்திடத்தே பெரும்பான்மையில் உபயோகிக்கப்படுவேது. ஏதோ ஏகதேசத்தில் ஜீவபரப் பிரயோகமு மதற்குண்டு. அதனுற்ருன் இவர் சுவீகாரஞ் செய்துகொண்ட பாஷ்யகாரராகிய ஸ்ரீகண்டயோகிக்கும் ப்ரம்மமீமாஞ்சா பாஷ்யம் முதற்சூத்திரத்தில்:—

ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய: ஶ்ரோதவ்ய:||

'ஆன்மாவன்ரோ அடியாலறியப்பாலவன்- கேட்கப்பாலவன்' என்ற பிருகதாரண்யக வசனத்தையே பிரமபரமாகவெடுத்து விஷயவாக்கியங் காட்டி விசாரித்தருளினுர். இவர் இனி அனேக விஷயங்களில் தம்முடைய சுவீகாரஞானபிதாவாய ஸ்ரீ கண்டயோகிதன் விரோதிக்கின்றமையால், அன்று அர்ச்சுனன் துரோணுசாரியருக்குக்குருதக்ஷிணையாகபோர்க்களத்தில் அளித்ததுபோல ஏதேனும் தட்சிணையளிக்குங்கால் அவர் செய்த ஆகமசித்தாந்தத் துரோகங்களுள் இதுவுமொன்ருக நேரிடும். இப்படிக்கு எல்லாப் பாஷ்யக்காரர்களும் ஒருங்கு சேர்ந்து ஓதுக்கின ஈசகுலாலவாதமான தர்க்கமென்னும் குதர்க்கசாஸ்திரத்துக்குத் தம்மினமான வைதிக காமிகாதி யாகம வழக்கை எந்தவைதிகரும் வேதார்த்தமாக சொற்பனத்துங் கருதாதிருக்க, இவர் அவற்றில் உரிமை கொண்டாடி இயல்பில் 'உபநிடதங்களுக்குரியவர்' எனப் பிரதிவாதிகளானஅத்துவிதிகளாலும் 'ஔபநிடதர்கள்சொல்வது' என்று கொள்ளப்பட்ட வேதாந்திகளை வெருட்டுவதும் திட்டுவதும் "அன்று தன்தவவலியால் பரமசிவத்தை யாராதித்து அவருக்குச் சினேகிதன்" என்ற பெரும்பதம் பெற்று லோகபாலராயதமது பிதாவாகிய விச்சிரவஸென்னும் முனிநாதன் ஆஜ்ஞையால் இலங்கையின் உரிமைபெற்ற சாத்துவிக வைதிக சாம்பவசிகாமணியான ஸ்ரீவைச்சிரவண மகாராஜனுடைய ஜ்யேஷ்டப் பிராதாவை, புஷ்பகத்தைப் பிடுங்கிக்கொண்டு இலங்கையுரிமை ஏற்று, அதனின்று வெருட்டிய புண்ணியஜனனுயகன் கதையைஞாபகத்திற்கு அன்னுட்டவர்பாற்சேர்க்கின்றது. இதுவுங்கிடக்க, மேல் தாயையடக்கி மகள் அவிசாரிபோகும் நேர்மையைக் காட்டுவாம்.ஏதோ சென்னை ஆரியனுர் தத்துவராயரைப் பிரமாணமாக வெடுத்தது குற்றமென்று வாய்கூசாமற் கூறியவிவர் சிவப்பிரகாசரை இங்கு லோககுருஸ்வாமிகளிலும் பெரிய தத்துவஞ்ஞராய் எடுத்துக் காட்டினுர். இச் சற்சித்தாந்த பரமாசாரியருடைய மகாபாசுபதாஸ்திர பீஜாக்ஷரங்கள் அவ்வப்பத்திரிகையில் விஷயோபக்கிரமங்களில் எ- பி- சி- டி- முதலியவைகளாகவே அமைக்கப்பட்டன. அவை இருபத்தாறு ஆகவே, பிரமவாதிகளுபயோகிக்கும் பிரமாஸ்திரமாகிய ஸ்ரீ காயத்திரியினும் இரண்டெழுத்துக்களை அதிகமாய்ப் பெற்றதாம். இது லங்காபாசுபதமோ? அல்லது கலிபாசுபதமோ? அல்லது நவீனபாசுபதமோ? அல்லது அனுரியபாசுபதமோ? ஏது எனப் பலவகைச் சந்தேகத்தைப் பார்ப்பாரடையாதிருக்கவேண்டி அவைதிகபீஜாக்ஷரங்களையாஸஞ் செய்தனர்.

இன்னும் வரும்.